## உசிலம்பட்டி நகராட்சி மன்றம்
## நகர்மன்ற சாதாரணக்கூட்டம்
## நாள். 28.04.2023 வெள்ளிக்கிழமை நேரம் – காலை 11.00 மணி

---

**மன்றப்பொருள்–1**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.எண். 35945/2022/EA2, நாள். 10.01.2023–இன்படி உசிலம்பட்டி நகராட்சிக்கு ரூ. 204.14/– இலட்சம் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் மூலம் செயல்படுத்த சேவை வழங்குநர் / முகவர் / மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுதனை தொடர்ந்து 24.03.2023–இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு செய்ததில் பணிகளை மேற்கொள்வதற்கான தொழில்நுட்ப மற்றும் விலை விகித ஆவணங்கள் ஒப்பந்த விதிகளின்படி தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளியாக M/s. Ram & Co., K.Pudur, Surya Nagar, Madurai என்பவரது ஒப்பந்தப்புள்ளி தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்ததாரருக்கு சம்மத கடிதம் வழங்கி தொகை செலுத்தியபின்பு வேலை உத்தரவு வழங்க நகர்மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2255/2023/இ1)

**தீர்மானம் எண்.**

**தீர்மானம் : ஒத்திவைக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–2**

உசிலம்பட்டி நகராட்சியில் முதலமைச்சர் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் 2022–2023–ன்கீழ் வார்டு–14 அரசு கள்ளர் துவக்கப்பள்ளி, கருக்கட்டான்பட்டி ஒருங்கிணைந்த சமையற்கூடம் கட்டடப்பணியினை ரூ. 27.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிமேற்கொள்வதற்கு 11.04.2023–இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் 2022–2023–ன்கீழ் வார்டு எண்.14 அரசு கள்ளர் துவக்கப்பள்ளி கருக்கட்டான்பட்டி, உசிலம்பட்டியில் ஒருங்கிணைந்த சமையற்கூடம் கட்டுதல் பணி | 27.00 | திரு. பி.பிரகாஷ் ஒப்பந்ததாரர் | 0.14% குறைவு |
| | | | M/s. வி.பி. கன்ஸ்ட்ரக்சன் | 0.66% அதிகம் |

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள திரு. பி.பிரகாஷ் ஒப்பந்ததாரர் என்பவரது ஒப்பந்தப்புள்ளிகள் மன்ற அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). மன்ற முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 550/2022/இ1)

**தீர்மானம் எண்.383**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–3</u>

உசிலம்பட்டி நகராட்சி வார்டு–9, வி.எம்.தெரு பகுதியில் பொதுமக்கள் கோரிக்கைக்கிணங்க அத்தெரு பகுதியில் தண்ணீர் வசதி ஏற்படுத்தி கொடுக்க ஆழ்துளை கிணறு அமைத்தல் பணியினை ரூ. 4.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). பொதுநிதி இருப்பினை கருத்தில் கொண்டு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 749/2023/இ1)

**தீர்மானம் எண்.384**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–4</u>

உசிலம்பட்டி நகராட்சியில் பொதுநிதியின்கீழ் 2023–24 ஆம் ஆண்டிற்கான திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் மூலம் செயல்படுத்த சேவை / வழங்குநர் / முகவர் மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் ஒப்பந்ததாரர் தேர்வு செய்திட ரூ. 204.14 இலட்சம் மதிப்பீட்டிலான பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் மற்றும் தமிழ், ஆங்கில தினசரி நாளிதழில் வெளியிட்டமைக்கான Bright Advertising நாளிதழுக்கு விளம்பர கட்டண தொகை ரூ. 57,382/– ( ரூபாய் ஐம்பத்து ஏழாயிரத்து முன்னூற்று எண்பத்து இரண்டு மட்டும்) வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2255/2023/இ1)

**தீர்மானம் எண்.385**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–5</u>

உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி நிதி 2022–23–இன்கீழ் இந்நகராட்சி பேருந்து நிலையத்தினை புதிதாக கட்டும் பணி மேற்கொள்ள 28.04.2023 அன்று மின் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்குபட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | மதிப்பீடு தொகையை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய | மதிப்பீடு தொகையை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|---|

| | | | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவிகிதம் | வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி நிதி 2022–2023 | | | | |
| 1 | உசிலம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12, ஏற்கனவே அமையப் பெற்றுள்ள பேருந்து நிலையத்தில் நவீன வசதிகளுடன் புதிய பேருந்து நிலையம் அமைத்தல் பணி | 977.00 | திரு. R.சதீஸ் ஒப்பந்ததாரர் உசிலம்பட்டி 2.95% குறைவு | திரு. D.சரவணக்குமார், 0.27% அதிகம் |

ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு**

வரிசை எண்.1–இல் கண்டுள்ள பணிக்கு கலம் எண். 4–இல் கண்ட திரு. ஆர்.சதீஸ் ஒப்பந்ததாரர் உசிலம்பட்டி என்பவர் மதிப்பீடு விட 2.95% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதை அனுமதித்தும், திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 808/2022/இ1)

**தீர்மானம் எண்.386**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–6**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA–IV) துறை அரசாணை (MS) எண்.28, நாள். 22.02.2023–இல் உசிலம்பட்டி நகராட்சி பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி அடிப்படை கட்டமைப்பு மற்றும் வசதிகள் ( I & A Fund ) நிதியின்கீழ் ரூ. 8.00/– கோடி மதிப்பீட்டில் இந்நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் (State Tender Bulletin) மற்றும் தினசரி நாளிதழ்களில் வெளியிட்டமைக்கான விளம்பர கட்டணம் ரூ. 87938/– தொகையினை Bright Advertising–க்கு வழங்கவும், ஆண்டு சந்தா தொகை ரூ. 2000/– வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 808/2022/இ1)

**தீர்மானம் எண்.387**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–7**

உசிலம்பட்டி நகராட்சியில் 2022–23 ஆம் ஆண்டிற்கான 15–வது நிதிக்குழு மான்ய பிணையில்லா மான்யத்திட்டத்தின்கீழ் சாலைப்பணிகள் தேர்வு செய்யப்பட்டு 30.03.2023 தேதியில் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| வ.எ. | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | வார்டு–20 திருவள்ளுவர் நகரில் பேவர்பிளாக் தளம் அமைத்தல் பணி (119021R221/119020S221) | 5.00 | M/s. வீ.பி. கன்ஸ்ட்ரக்சன் | 0.15% குறைவு |
| | | | M/s. சீத்தாராமதாசன் அன் கோ | 4.25% அதிகம் |
| 2 | வார்டு–20 திருவள்ளுவர் நகரில் பேவர்பிளாக் தளம் அமைத்தல் பணி (119021S138/119020S138) | 8.30 | M/s. வீ.பி. கன்ஸ்ட்ரக்சன் | 0.07% குறைவு |
| | | | M/s. சீத்தாராமதாசன் அன் கோ | 2.75% அதிகம் |
| 3 | வார்டு–19, EB Transformer தெருவில் பேவர்பிளாக் தளம் அமைத்தல் பணி (119020R216/119020R216) | 10.00 | M/s. வீ.பி. கன்ஸ்ட்ரக்சன் | 0.09% குறைவு |
| | | | M/s. சீத்தாராமதாசன் அன் கோ | 2.00% அதிகம் |
| 4 | வார்டு–22 பாரதியார் நகரில் பேவர்பிளாக் தளம் அமைத்தல் பணி (119022S143/119022S143) | 4.70 | M/s. வீ.பி. கன்ஸ்ட்ரக்சன் | 0.04% குறைவு |
| | | | M/s. சீத்தாராமதாசன் அன் கோ | 0.30% அதிகம் |
| 5 | வார்டு–20 திருவள்ளுவர் நகரில் பேவர்பிளாக் தளம் அமைத்தல் பணி (119021R223/119020R223) | 18.00 | M/s. வீ.பி. கன்ஸ்ட்ரக்சன் | 0.08% குறைவு |
| | | | M/s. சீத்தாராமதாசன் அன் கோ | 0.25% அதிகம் |
| | மொத்தம் | 46.00 | | |

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). மேற்படி பணிக்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1234/2022/இ1)

**தீர்மானம் எண்.388**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–8</u>

உசிலம்பட்டி நகராட்சி வார்டு–19, சுப்பு செட்டியார் தெரு மற்றும் பிரின்ஸ்பல் போஸ் தெரு பொதுமக்களின் கோரிக்கைக்கிணங்க அப்பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய சின்டெக்ஸ் டேங்க் மற்றும் பைப்அமைத்தல் பணி மற்றும் செல்வி மஹால் தெருவில் (நாடார் ஸ்கூல் அருகில்) உள்ள பழுதடைந்த நிலையில் உள்ள போர்வெல்–ஐ பழுதுநீக்கம் செய்தல் பணியினையும் ரூ. 4.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). பொதுநிதி இருப்பினை கருத்தில் கொண்டு பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.750/2023/இ1)

**தீர்மானம் எண்.389**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–9</u>**

உசிலம்பட்டி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2022–23–இன்கீழ் பூங்கா அமைத்தல் பணி ரூ. 29.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டதில் தற்போது கூடுதல் பணியாக CCTV கேமரா, மின் விளக்கு வசதி, இருக்கை அமைத்தல் மற்றும் மரம் நடுதல் பணிகளை ரூ. 9.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1081/2022/இ1)

**தீர்மானம் எண்.390**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–10</u>**

உசிலம்பட்டி நகராட்சி 1 முதல் 24 வரை உள்ள வார்டுகளில் நகராட்சிக்குச் சொந்தமான 125 எண்ணம் சிறுமின்விசை பம்பு மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட 125 எண்ணம் சிறுமின் விசை பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் மோட்டார் பழுது சரி செய்து பொதுமக்கள் தடையில்லா குடிநீர் வழங்கும் பொருட்டு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 5.00 இலட்சத்தில் குடிநீர் பணி அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.752/2023/இ1)

**தீர்மானம் எண்.391**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–11</u>**

உசிலம்பட்டி நகராட்சி பகுதியின் மொத்த மக்கள் தொகை 35219 ஆகும். நகராட்சியின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் (Own Source) இருந்து பொது மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதிக்கு ஒரு நாள் ஒன்றிற்கு ஒரு நபர் ஒன்றிற்கு 90 LPCD வீதம் தேவைப்படும் மொத்த குடிநீரின் அளவு 3.17 MLD ஆகும். இந்நகராட்சி பகுதிக்கு உள்ளூர் குடிநீர் ஆதாரமான அணைப்பட்டி–எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நிரேற்று நிலைய குடிநீர் திட்டத்தின் மூலம் நாள் ஒன்றிற்கு 1.20 MLD மற்றும் ஆண்டிபட்டி–சேடபட்டி குடிநீர் திட்டத்தின் மூலம் 1.50 MLD குடிநீர் பெறுவதற்கு வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சிக்குச் சொந்தமான எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் உசிலம்பட்டி நகர் பகுதியிலிருந்து 23.5 கி.மீ. தொலைவில் உள்ளது. எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து 100 எச்.பி. மோட்டார் மூலம் குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு 24 வார்டுகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பம்பிங் மெயின் அமைக்கப்பட்டுள்ள DI மற்றும் A/C பைப்புகள் அவ்வப்போது பழுது ஏற்பட்டு குடிநீர் வழங்குவதில் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, மேற்படி பழுது நீக்கம் மேற்கொள்ள செய்யவும்

அதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 5.00/– லட்சத்தில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.751/2023/இ1)

**தீர்மானம் எண்.392**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–12</u>

உசிலம்பட்டி நகராட்சியில் அனைத்து வார்டு பகுதிகளிலும் குடிநீர் விநியோகம் செய்யப்படும் பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணியினை ரூ. 3.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.753/2023/இ1)

**தீர்மானம் எண்.393**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–13</u>

உசிலம்பட்டி நகராட்சி வார்டு–21, வில்லாணிச்சாலை, ஒத்தப்பட்டி சாலை மற்றும் பி.எம்.டி. நகர் பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் பைப் லைன் அமைத்தல் பணியினை ரூ. 4.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). பொதுநிதி இருப்பினை கருத்தில் கொண்டு பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.753/2023/இ1)

**தீர்மானம் எண்.394**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–14</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 18274/2022/CFC–1, நாள். 21.03.2023 கடிதத்தில் 2022–23 ஆம் ஆண்டிற்கான TIED Grant நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 69.00 இலட்சத்தில் ரூ. 32.60 இலட்சத்திற்கு திடக்கழிவு மேலாண்மை பணிகளான பொதுச்சுகாதாரப்பணிக்கு 9 எண்ணம் BOV (Battery Operated Vehicle) – வாகனங்கள் ரூ. 18.00 இலட்சம் மதிப்பீட்டில் மற்றும் 2 எண்ணம் LCV (Light Commercial Vehicle) வாகனங்கள் ரூ. 14.60 இலட்சம் மதிப்பீட்டில் விநியோகம் செய்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). அவசர அவசியம் கருதி மன்ற முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.342/2023/இ1)

**தீர்மானம் எண்.395**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–15</u>

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்கள் அறிவுரையின்படி உசிலம்பட்டி நகராட்சி வரி மற்றும் வரியில்லா இனங்கள் நிலுவை இல்லாமல் வசூலிக்க தினசரி குறியீட்டு நிர்ணயம் செய்து 100 சதவிகிதம் அடையவும் வசூல் பணி துரிதப்படுத்தவும் கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும், சொத்துவரி எண், குடிநீர் இணைப்பு எண்களுடன் ஆதார் கார்டு மற்றும் இதர ஆவணங்களை இணைக்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்ட வகையில் பிரியா ரேடியோஸ் அன் லைட்ஸ் நிறுவனம் மூலம் விளம்பர செய்த வகையில் கீழ்க்கண்ட தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

15.03.2023 முதல் 31.03.2023 வரை (16 தினங்கள்)
ஆட்டோ ஒலிபெருக்கி வாடகை 2600 x 16 = 41600
20.04.2023 மற்றும் 21.04.2023 ஆகி ய இரண்டு தினங்கள்
ஆட்டோ ஒலிபெருக்கி வாடகை ரூ. 2600x2 = 5200
-----------
மொத்தம் ரூ. 46800
----------

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 1775/2021/அ1)

**தீர்மானம் எண்.396**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–16</u>

உசிலம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நியைத்தில் புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. நகராட்சி சார்பாக ஆஜராகிய கீழ்க்கண்ட வழக்கறிஞர்களுக்கு வழக்குரை கட்டணம் வழங்க மன்ற அனுமதிக்கு

1). சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை
வழக்கு எண்.W.P.(MD) No. 6599, 6600, 6601/2023 கட்டணம் ரூ. 70,000
திரு. வீராகதிரவன், AAG

2). சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை
வழக்கு எண். W.P.(MD) No. 24886/2022 கட்டணம் ரூ. 10,000
வழக்கு எண்.W.P.(MD) No. 6494. 6495, 6496.
6497, 6599, 6600, 6601/2023 கட்டணம் ரூ. 70,000
திரு. வி. ஆஸ்டின், வழக்கறிஞர்

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 193/2023/எப்.1)

**தீர்மானம் எண்.397**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–17</u>

உசிலம்பட்டி நகராட்சி 2023–2024–ஆம் ஆண்டு ஏப்ரல் 30–க்குள் சொத்துவரி செலுத்துவோருக்கு 5% ஊக்கத்தொகை வழங்கப்படும் என்ற விபரத்தினை தெரிவித்து அரசாணை வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட விபரங்களை தெரிவித்து அரசாணை வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு செல்ல மேற்படி விபரங்களை தினசரி நாளிதழ்கள், பிளக்ஸ் பேனர் 5 எண்ணம், ஆட்டோ மூலம் விளம்பரம் செய்த வகையில் கீழ்க்கண்ட செலவினத்தொகை ரூ.32,000/–ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 1). ஆட்டோ ஒலிபெருக்கி வாடகை 2 நாள் | – ரூ. 5200 |
| 2). ஜெ.எம்.எஸ். பிளக்ஸ் பேனர் 5 எண்ணம் | – ரூ. 5500 |
| 3). கே.எஸ்.செல்வம் த/பெ. காளிமுத்து பேனர் வைத்த வகையில் செலவினம் (5 இடங்கள்) | – ரூ. 15000 |
| 4). தினசரி நாளிதழ்கள், தினமலர் | – ரூ. 6300 |
| மொத்தம் | ரூ. 32000 |

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1775/2021/அ1)

**தீர்மானம் எண்.398**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–18</u>

உசிலம்பட்டி நகராட்சி அலுவலகத்திற்கு வருகைதரும் பொதுமக்கள், பிரதிநிதிகள் மற்றும் இவ்வலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க அக்வா குடிநீர் கொள்முதல் செய்யவும், அதனை பொருத்துவதற்கான செலவினத்தொகை ரூ. 14000/–ஐ திரு.பி.சந்திரன் அவர்களுக்கு வழங்க மன்ற வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1775/2021/அ1)

**தீர்மானம் எண்.399**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–19</u>

இந்நகராட்சியில் தூய்மை பணியாளர்களாக பணிபுரியும் திருமதி. அய்யம்மாள், திருமதி.தனலெட்சுமி, திரு. பழனி, திருமதி. ஜெயலெட்சுமி, திருமதி. பேச்சியம்மாள், திரு.வேளாங்கன்னி ஆகியோர்கள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடந்த வழக்கு எண்கள். W.P.(MD) No. 391 to 396/ 2016–இன் தீர்ப்புரை எதிர்த்து நகராட்சி சார்பாக மேல்முறையீடு செய்ததற்கு (W.A.S.R (MD) No. 25090 to 25095 / 2019) ஒரு வழக்கிற்கு ரூ.7500 வீதம் 6 வழக்குகளுக்கு ரூ. 45000/– திரு. கே. மகேந்திரன் வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 12259/2019/சி1)

**தீர்மானம் எண்.400**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–20**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பொதுச்சுகாதார பிரிவு வாகன எண். TN–58 AW 1238, TN–58 AW 3247–க்கு சாலைவரி மற்றும் TN 58 BW– 1238–க்கு தகுதிச்சான்று புதுப்பித்தல் கட்டணம் போன்றவை கீழ்க்கண்ட விபரப்படி தனது சொந்த செலவில் செலுத்தி அதற்கான இரசீது நகல் இணைத்துள்ளார்.

| | |
|---|---|
| TN–58 AW 1238 சாலை வரி | – ரூ. 1068 |
| TN–58 AW 3247 சாலை வரி | – ரூ. 1068 |
| TN–58 AW 1238 தகுதிச்சான்று புதுப்பித்தல் கட்டணம் | – ரூ. 3950 |
| | ------------ |
| | மொத்தம் ரூ. 6086 |

மேற்படி தொகை ரூ. 6086/– திரு. எஸ். ஜெயராஜ் பாண்டி டெக்ஸ்கோ ஓட்டுநக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 168/2022/எச்.1)

**தீர்மானம் எண்.401**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–21**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 3088/2022/SBM1 நாள். 31.03.2023–இன்படி இந்நகராட்சியில் MCC மூலமாக மக்கும் குப்பையிலிருந்து தயாரிக்கப்படும் இயற்கை உரம் "செழிப்பு" என்ற பெயரில் விற்பனை செய்ய கீழ்க்கண்ட விபரப்படி கட்டணம் வேளாண் துறைக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1). வேளாண் உரிமக்கட்டணம் ரூ. 2250/–

2). உரமாதிரி பகுப்பாய்வு கட்டணம் ரூ. 3850/–

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 377/2023/எச்.1)

**தீர்மானம் எண்.402**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–22**

இந்நகராட்சியில் ஆகஸ்ட் 15 சுதந்திர தின விழா மற்றும் ஜனவரி 26 குடியரசு தின விழாவிற்கு நகராட்சி அலுவலகம் முழுவதும் அலங்கார விளக்குகள் அமைத்து சிறப்பாக

கொண்டாடியதற்கு உரிய செலவினத்தொகை ரூ. 18200/- திரு. கே. சிவக்குமார், சுகாதார ஆய்வருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 7273/2019/சி1)

**தீர்மானம் எண்.403**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்-23</u>

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், நகரின் முக்கிய சாலைகள், பேருந்து நிலையங்கள் மற்றும் முக்கிய இடங்களில் வாகனம் மூலம் பயன்படுத்தி புகை தெளிக்க பயன்படுத்தப்படும் Vehicle Mounted Fogging Machine 1 எண்ணம், Hand Fogging Machine 5 எண்ணம் & Gas Cylinder 100 எண்ணம் கொள்முதல் செய்யவும் மற்றும் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | கொள்முதல் செய்யப்படும் இயந்திரத்தின் பெயர் மற்றும் வேலையின் விபரம் | ஒப்பந்தபுள்ளி அளித்த நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | Vehicle Mounted Fogging Machine 1 No | 1.M/S OM SAKTHI TECH SERVICES, CHENNAI | RS.372000 + GST 18% |
| | | 2.M/S SAKTHI INDUSTRIES, CHENGALPATTU | RS.372850 + GST 18% |
| 2 | Annual Maintenance for fogging machine | 1.M/s. OM SAKTHI TECH SERVICES, CHENNAI | Rs. 133800/- |
| | | 2.M/s. SAKTHI INDUSTRIES, CHENGALPATTU | RS.134100/- |
| 3 | Hand Fogging Machine 5 Nos & Gas Cylinder 100 Nos | 1.M/s. S.N. ENTERPRISES, CHENNAI | 1.Rs. 24100/ 1No Hand Fogg machine<br>2.Rs.338/ 1NO Gas cylinder |
| | | 2.M/s. SYSTEMS ENGINEERING, CHENNAI | 1.Rs. 23520/ 1No Hand Fogg machine<br>2.Rs.330/ 1NO Gas cylinder |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s. OM SAKTHI TECH SERVICES, CHENNAI மற்றும் M/s. SYSTEMS ENGINEERING, CHENNAI நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 559/2023/எச்1)

**தீர்மானம் எண்.404**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்-24</u>

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் முதல் நிலை கழிவுகள் சேகரிக்க பயன்படுத்தப்படும் தள்ளுவண்டிகள் 3 எண்ணம் பழுதடைந்துள்ளதால் தள்ளுவண்டிகளை

பழுது நீக்கம் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

1.ஆர். பால்பாண்டி கிரில் ஒர்க்ஸ் , உசிலம்பட்டி – ரூ.29250/–

2.எஸ்.கே.எஸ் கிரில் & பர்னிச்சர் ஒர்க்ஸ், உசிலம்பட்டி – ரூ.32100/–

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஆர்.பால்பாண்டி கிரில் ஒர்க்ஸ், உசிலம்பட்டி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 357/2021/எச்1)

**தீர்மானம் எண்.405**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–25</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 24 வார்டுகளில் பொதுமக்களின் பாதுகாப்பு கருதி சுற்றித்திரியும் தெரு நாய்களை கணக்கெடுத்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்யவும், வெறிநாய்க்கடி தடுப்பூசி போடவும் ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.1,43,500/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 3156/2012/எச்1)

**தீர்மானம் எண்.406**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–26</u>

இந்நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண். 240, நாள். 30.12.2022–இல் ரூ. 2,50,000/– அனுமதிக்கப்பட்டதன்படி இந்நகராட்சி பொதுப்பிரிவில் தேவையான உபகரணங்கள் மேஜை மற்றும் நாற்காலிகள் வாங்குவதற்கு முதற்கட்டமாக நான்கு நாற்காலிகள் வாங்குவதற்கு நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ சாஸ்தா பர்னிச்சர்ஸ் | 4/17500 | 70000 |
| 2 | ஸ்ரீ ரமணா பர்னிச்சர் | 4/16500 | 66000 |
| 3 | பழனி பல்நோக்கு சேவைத்தொழில் கூட்டுறவு சங்கம் | 4/18500 | 74000 |

<u>அலுவலக குறிப்பு</u>

1). மன்றம் அனுமதி வழங்கலாம்

2). நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1285/2022/பி1)

**தீர்மானம் எண்.407**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்: 27</u>

இந்நகராட்சிக்குச் சொந்தமான உ.வாடிப்பட்டி உரக்கிடங்கில் அதிக அளவில் கழிவுகள் தேக்கமடைந்துள்ளதாலும் அடிக்கடி தீ விபத்து எற்படுவதால் அப்பகுதி பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டதாலும் வருவாய் கோட்டாட்சியர் தலைமையில்

சமாதான பேச்சுவார்த்தை நடத்தப்பெற்றது. எனவே, சமாதான பேச்சுவார்த்தையின் படியும் அடிக்கடி தீ விபத்து ஏற்படுவதாலும் அதிக அளவில் தேக்கமடைந்துள்ள கழிவுகளை ஹிட்டாச்சி இயந்திரம் மூலம் ஒதுக்கவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ.1,20,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு</u>

பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1950/2021/எச்.1)

**தீர்மானம் எண்.408**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்: 28</u>

இந்நகராட்சியில் 2023–2024–ஆம் ஆண்டு கணினி வசூல் மையத்தில் பொதுமக்களால் செலுத்தப்படும் வரியினங்களுக்கு வழங்கக்கூடிய சேவை மைய பற்றுச்சீட்டு ரசீது எண்கள் 1 முதல் 40000 வரை செய்யப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை ரூ. 56,640/– ஐ A–2295 The Madurai Co–operative Printing Works Ltd., மதுரை அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 957/2014/பி2)

**தீர்மானம் எண்.409**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்: 29</u>

இந்நகராட்சியில் 2023–2024–ஆம் ஆண்டுக்குத் தேவையான எழுது பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள் ஏ4 வெள்ளை பேப்பர் கொள்முதல் செய்யப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை ரூ. 19,928/– ஐ A–2295 The Madurai Co–operative Printing Works Ltd., மதுரை அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 957/2014/பி2)

**தீர்மானம் எண்.410**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

நகர்மன்ற தலைவர்
உசிலம்பட்டி நகராட்சி.